## தலைப்பு 130 – பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 26 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 20 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட இந் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) உபபிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் இணங்குவதாகவும்

(ஆ) இவ்வறிக்கையில் 1.6.1(ஆ) பந்தியில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் கடந்த வருடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான எனது அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 வருமானம் பெறுவனவு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 இன் வருடாந்த வருமான மதிப்பீட்டின் 3.2.2 அரச வருமானம் வரியல்லாத வருமானங்களான வருமானக் குறியீடு 20.02.01.01 இன் பிரகாரம் அரச கட்டிடங்கள் மற்றும் மனைகளுக்கான வாடகை ஆரம்ப வருமான மதிப்பீடு ரூபா 1,400 மில்லியன் ஆக காட்டப்பட்டிருந்தும் ஆனால் நிதிக்கூற்றுக்களில் வருமானக் கூற்றில் ஆரம்ப மதிப்பீடாக ரூபா 925 மில்லியன் காட்டப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ரூபா 475 மில்லியன் அதாவது நூற்றுக்கு 51.35 | சரியான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டியமை. | அரச நிதிக் கொள்கைகள் திணைக்களத்தினால் அமைச்சிற்கு அறிவிக்கப்படாது நூற்றுக்கு 50 வீதத்திற்கும் அதிகமாக வருமான மதிப்பீடு அதிகரிக்கப்பட்டிருந்தது. |

வீதத்தால் வருமான மதிப்பீடு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.6.2 எல்லைகளை மிகைத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் உச்ச செலவின எல்லையானது ரூபா 16,989,178 ஆல் விஞ்சப்பட்டிருப்பதுடன் உச்ச வரவு மீதி எல்லையானது ரூபா 50,402,471 ஆல் விஞ்சப்பட்டிருந்தது. மேலும், குறைந்தபட்சப் பெறுவனவுகள் எல்லை ரூபா 25,106,021 ஆல் அதிகரித்திருந்தது. எல்லைகளைத் திருத்துதல் தொடர்பாகத் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தினால் நிதி அமைச்சின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 503 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | 2019 ஆம் ஆண்டிற்கான முற்பண ‘‘பீ’’ கணக்கிற்குரிய எல்லைகள் கணிப்பிடப்படும் போது தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தினால் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு உள்ளடக்கப்படாமல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இது சம்பந்தமான எல்லைகளை அதிகரிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் அரச நிர்வாக அமைச்சரின் கையொப்பத்துடன் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டதுடன் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் BD/AA/130/13001/2019 ஆன இலக்கமுடைய 2019.08.28 திகதிய கடிதத்தின் மூலம் முற்பண ‘‘பீ’’ கணக்கின் எல்லைகளை திருத்தி அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

### 1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **பிணைப் பதிவேடு**<br>நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய அலுவலகர்கள் மற்றும் சேவகர்களின் தகவல்கள் உள்ளடக்கப்பட்டதாக பிணைப் பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பிணைப் பதிவேடொன்று பேணப்பட வேண்டியமை. | நிதிப்பிரமாணம் 891 இன் பிரகாரம் பிணை அறவிடுதல் சம்பந்தமாக நடைமுறைச் சிக்கல்கள் காணப்பட்டமையால் பிணைப் பதிவேடு நாளதுவரையாக்கப் படாமையுடன் இது சம்பந்தமாக திறைசேரியின் தேவையான ஆலோசனைகள் பெறப்பட்டு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டதிட்டங்கள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்கா சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| | அவதானிப்பு | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- | --- |
| | **சட்டதிட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| (அ) | 1951 இன் 16 ஆம் இலக்க மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்தின் 151(2) மற்றும் 151(3) ஆம் பிரிவுகள் | 2019 ஆம் ஆண்டில் அமைச்சில் ஏற்பட்டிருந்த 8 வாகன விபத்துக்களில் அமைச்சரின் அலுவலகத்திற்கும் மற்றும் உத்தியோகத்தர்களுக்குமாக வழங்கப்பட்டிருந்த 6 வாகனங்கள் கவனக் குறைவாகவும் மற்றும் அதிக வேகத்திலும் பயணித்தமையால் ஏற்பட்டிருந்தன. இதனால் ஏற்பட்டிருந்த நட்டங்கள் ரூபா 3,550,083 ஆகும். | நெடுஞ் சாலைகளைக் கவனக் குறைவாக அல்லது ஆபத்தான முறையில் பயன்படுத்து பவர்களுக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை | கருத்துரை வழங்கப்படவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் XIX ஆம் அத்தியாயம் | | | |
| (i) | 4.1 ஆம் பிரிவு | நீண்ட காத்திருப்பு பட்டியலொன்று இருக்கையில் ஒரு சம்மேளன வீடு 27 வருடங்களுக்கு முன்பிருந்தும் மற்றும் இன்னும் ஒரு வீடு 2001 ஆம் வருடத்திலிருந்தும் மாதாந்தம் முறையே ரூபா 275 மற்றும் ரூபா 1,000 ஆன வாடகைக்கு இலங்கை நிர்வாக சேவை சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தன. | பொது வீடுகள் அட்டவணைப் படுத்தப்பட்ட வீடுகள் ஒதுக்குதல் தொடர்பாக ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | அமப/1991/116(70) ஆம் இலக்க 1991.10.16 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின்படி 23C சம்மேளன வீடு ரூபா 275 பெயரளவிலான வாடகை ஒன்று அறவிடப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மேற்கூறிய அமைச்சரவைத் தீர்மானத்தினைக் கருத்திற் கொண்டு அப்போதிருந்த அமைச்சின் செயலாளரினால் 26C சம்மேளன வீடு 2001.02.02 ஆந் திகதியிலிருந்து ரூபா 1,000 பெயரளவிலான வாடகையை அறவிடுவதற்காக இலங்கை நிர்வாகச் சேவை சங்கத்திற்கு ஒதுக்கப்பட்டது. |
| (ii) | 5.2.1 ஆம் பிரிவு | 2012 ஆம் வருடத்திலிருந்து 2019 ஆம் ஆண்டு வரைக்கான காலப்பகுதிக்காக அரச உத்தியோகபூர்வ வீடுகளின் வாடகையாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 64,653,051 ஆன தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | விவாகமான உத்தியோகத்தர் ஒருவரின் மாதாந்த சம்பளத்தில் நூற்றுக்கு 12.5 வீதமும் விவாகமாகாத உத்தியோகத் தரின் சம்பளத்தில் நூற்றுக்கு 7.5 வீதமுமாக அறவிடப்பட | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்டிருந்த 2 பங்களாக்களுக்காக ரூபா 36,042,000 ஆன வாடகையில் கடந்த காலத்திலிருந்து அனுப்பப்பட்ட மற்றும் மதிப்பிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வேண்டிய நிலுவை வாடகையை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. | கணக்கிடப்பட்ட நிலுவைத் தொகையான ரூபா 13,614,000 ஐ விரைவில் செலுத்துவதற்கு உடன்பட்டமையுடன் மிகுதித் தொகையான ரூபா 22,428,000 பெறுமதியை கூடிய விரைவில் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். ஏனைய நிலுவை வாடகை அறவிடப்படுவதற்கு அடிக்கடி அறிவிப்புக்கள் செய்யப்பட்டுள்ளன. ஜயவர்த்தனகம வீட்டுத் தொகுதியில் வீடுகளுக்குரித்தான நிலுவை வீட்டு வாடகை ரூபா 8,755,182.56 ஆன தொகை கைவிடப்படுவதற்கான அனுமதிக்காக அரச நிதித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (iii) | 6.1 ஆம் பிரிவு | 14 அமைச்சர்களும் 14 அரச உத்தியோகத்தர்களும் கணக்காய்வுத் தினமாகிய 2020 யூலை 22 வரையில் அனுமதியின்றி அரச வீடுகளில் வசித்து வந்தமை அவதானிக்கப்பட்டது. | தாபனக் கோவையின் ஏற்பாடுகளைப் பின்பற்ற வேண்டியமை. | உத்தியோகத்தர்கள் 6 பேருக்காக சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் 7 உத்தியோகத்தர்கள் தொடர்பாக வீடுகளை கையளிக்குமாறு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு உத்தியோகத்தருக்கு வெளியேறுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. 8 அமைச்சர்கள் தொடர்பாக வெளியேறுமாறு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | அறிவித்தல் விடுக்கப்பட்டதுடன் 6 பேருக்கு வீடுகளைக் கையளிக்குமாறு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02.்.2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | மனிதவளத் திட்டத்தின் பிரகாரம் பதவியணியினரின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் வருடத்திற்கு குறைந்த பட்சம் 12 மணித்தியாலங்களுக்குக் குறையாத பயிற்சிக்கான சந்தர்ப்பங்கள் சான்றுப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், ஆனால் 2019 வருடத்திற்காக மனிதவளத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 2018/2019 வருடங்கள் இரண்டிற்குமாக ஒரு மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டதுடன் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்பாக விசேட கவனம் கோரப்பட்டு 2020 ஆம் வருடத்திற்கான மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலுவை வருமானம் | | |
| | 2015 ஆம் வருடத்தலிருந்து 2019 வருடம் வரையான 05 வருடங்களுக்கு நிலுவை வருமான வருடாந்த அறவீடு நூற்றுக்கு 22 இற்கும் குறைந்த சதவீதமாகக் காணப்பட்டது. அத்துடன் நிலுவை வருமானத்தில் ரூபா 146,803,677 ஆனது 2016 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முந்திய மீதிகளாகக் காணப்பட்டமையுடன் அது முழு நிலுவை வருமானத்தின் நூற்றுக்கு | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை விரைவாக எடுக்கப்பட வேண்டியமை. | 2017.01.01 ஆந் திகதிக்குப் பின்னர் அறிக்கையிடப்பட்ட நிலுவை வருமானத்தின் கணிசமான தொகை வசூலிக்கப்பட்டதுடன் ஆனால் எதிர்பார்க்கப்பட்டவாறு ஏனைய காரணங்களின் அடிப்படையில் வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. 2016 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் 14 நிறுவனங்களுக்கான ரூபா 146,803,677 ஆன மிகுதியை அறவிடப்படுவதற்கு கடினமாக இருந்தது. குறிப்பிட்ட நிறுவனங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | 59 ஆன சதவீதம் ஆகும். | | தற்போது அறிவுறுத்தப்பட்டிருப்பதுடன் எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (ஆ) | 2019 சனவரி 01 ஆந் திகதியில் நிலுவை வருமானம் மிகுதி, 2018 சனவரி 01 ஆந் திகதியுடன் ஒப்பிடும் போது 54,437,902 இனால் அதாவது நூற்றுக்கு 29 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை விரைவில் எடுக்கப்பட வேண்டியமை. | 2018 ஆம் வருடத்திற்கான அறிக்கையிடப்பட்ட நிலுவை வருமானத்திற்கு ஒப்பிடும் போது அறவிடப்பட முடிந்த வருமானம் குறைந்துள்ளது. மேலும், 2019.01.01 திகதியில் நிலுவை வருமான மிகுதியினுள் 2018 ஆம் வருடத்திற்கு முற்பட்ட வருடங்களில் அறிக்கையிடப்படாத ரூபா 28,550,028 ஆன நிலுவை வருமானம் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் இந்நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | உணவு ஆணையாளர் திணைக்களத்தின் 2019 ஆம் வருட இறுதியின் போது ரூபா 93,379,479 ஆன வருமானம் அறவிடப்பட வேண்டிய இருந்தமையுடன் இந்நிலுவைத் தொகை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனங்களை அறிவுறுத்தி மிகுதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 2019 ஆம் வருடத்தில் நிலுவை வருமானமாக ரூபா 84,815,474 தொகையில் ரூபா 20,361,820 ஆன தொகை அறவிடப்பட்டது. 2019.12.31 ஆந் திகதியில் ரூபா 93,379,479 நிலுவை வருமானம் காணப்பட்டமைக்கான காரணமாக அமைந்தது உடன்படிக்கையின் பிரகாரம் வாடகைப் பணம் செலுத்தப்படாமையுடன் நிலுவை வாடகை அறவிடப்படுவதற்குத் தேவையான செயன்முறைகள் இற்றை வரையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டிடங்கள், 2009 ஆம் வருடத்திலிருந்து 2011 ஆம் வருடம் வரை அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 33,465,869 ஆனது அறவிடப்படவில்லை யென்பதைத் தெரியப்படுத்துவதுடன் தேவையான அனுமதியைப் பெற்று நீக்கம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நீண்டகாலமாக அறவிடப் படாமையினால் நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | நான்கு நிறுவனங்கள் சம்பந்தமாக அறவிடப்பட முடியாத ரூபா 33,465,869 ஆன மொத்த நிலுவைத் தொகையை புத்தகங்களில் நீக்குவதற்கான திறைசேரியின் அனுமதி பெறுவதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் இற்றை வரையில் திறைசேரியின் அனுமதி வழங்கப்படாமையுடன் எதிர்காலத்தில் திறைசேரியின் அனுமதி பெறப்பட்டு புத்தகங்களில் நீக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | நாட்பட்ட சிறுநீரக நோய்த்தடுப்பு மற்றும் ஆராய்ச்சி செயலக அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த அரச மனையின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு நிலுவையாகவிருந்த வருமான மிகுதி ரூபா 6,450,000 ஆக இருந்ததுடன் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிலுவை வருமான மிகுதியொன்று காட்டப்பட்டிருக்கவில்லை. எனினும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கான நிலுவை மிகுதியாகக் கணக்கிடப்பட்டிருந்தது 2017 ஆம் வருடம் வரையிலான நிலுவை வருமானம் மற்றும் மீளாய்வாண்டிற்கான வாடகையான ரூபா 9,510,000 மட்டுமே. | பெற வேண்டிய வருமானம் சரியாகக் கணக்கிடப்பட வேண்டியமை. | 2015 ஆம் வருடத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய வாடகை தொகையைத் தீர்க்குமாறு பல தடவைகள் அறிவுறுத்தப்பட்டதுடன் இற்றை வரையில் அந்நிலுவைத் தொகையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த மதிப்பீடு மற்றும் நி.பி 66 மாற்றுதல் மூலம் மீண்டெழும் செலவு விடயங்கள் சம்பந்தமாக ஒதுக்கப்பட்டிருந்த ஒதுக்கம் ரூபா 10,140,000 ஆனது குறிப்பிட்ட தேவைக்காகப் பயன்படுத்தப்படாமல் முற்றுமுழுதாகச் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியமை. | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |
| (ஆ) | மீண்டெழும் செலவு விடயங்கள் 15 இற்கான முழுமையான தேறிய ஒதுக்கம் ரூபா 118,335,000 என்பதுடன் மொத்தச் செலவுகள் ரூபா 93,786,592 என்பதால் மொத்தச் சேமிப்பின் அளவு ரூபா 24,548,408 ஆகும். இச்சேமிப்பு மொத்த ஒதுக்கத்தின் நூற்றுக்கு 15 தொடக்கம் நூற்றுக்கு 60 சதவீதத்திற்கிடையிலான வீச்சைக் கொண்டிருந்தது. | - மேற்படி - | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |
| (இ) | ஒதுக்கங்கள் நிதியாண்டிற்குள் செலவிடப்படுவதற்குப் போதியளவில் இல்லாமை மற்றும் ஒதுக்கங்கள் விஞ்சப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுமென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கருதினால் மட்டுமே நி.பி 66 இன் பிரகாரம் பணம் மாற்றப்பட முடியுமாயினும் அந்நிலைமையைக் கருத்திற் கொள்ளாது 14 சந்தர்ப்பங்களில் வேறு செலவு விடயங்களிலிருந்து ஒதுக்கங்கள் மாற்றப்பட்ட போது நூற்றுக்கு 35 இலிருந்து | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியமை. | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | நூற்றுக்கு 100 வீதம் வரையான வீச்சில் சேமிப்புக்கள் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) | 2019 செப்டம்பர் 04 ஆந் திகதிய 5/2019 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பிரகாரம் மூலதனச் செலவுகளில் நூற்றுக்கு 25 வீதம் கட்டாயச் சேமிப்பு செய்யப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 31 செலவு விடயங்கள் தொடர்பாக நூற்றுக்கு 10 வீதம் மாத்திரமே சேமிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி அச்சீட்டுத் தாள்களின் பிரகாரம் மீண்டெழும் செலவு விடயங்கள் 34 இற்கான பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 30,604,603 என்பதுடன் 2019 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த பெறுமதி ரூபா 17,685,619 என்பதால் திறைசேரி அச்சீட்டுத் தாள்கள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் ரூபா 16,779,208 இனால் இணங்கவில்லை. | திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்களின் பிரகாரம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இவ்வேறுபாடு சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தினால் ஏற்பட்ட தொழில்நுட்ப தவறு என்பதுடன் அது 2020 யூன் மாதத்திற்குள் அரச கணக்குகள் திணைக்களத்தினால் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்களின் பிரகாரம் மூலதனச் செலவு விடயங்கள் 08 இற்கான பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 318,763,582 என்பதுடன் 2019 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த பெறுமதி ரூபா 191,540,521 என்பதால் திறைசேரி அச்சீட்டுத் தாள்கள் | - மேற்படி - | இவ்வேறுபாடு சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தினால் ஏற்பட்ட தொழில்நுட்பத் தவறு என்பதுடன் 2020 யூன் மாதத்திற்குள் அரச கணக்குகள் திணைக்களத்தினால் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் நிதிக்கூற்றுக்கள் ரூபா 127,223,061 இனால் இணங்கவில்லை. | | |
| (இ) | மீளாய்வாண்டின் நிதிப்பிரமாணம் 216(அ) ஏற்பாடுகளுக்கு முரணாக தேறிய ஒதுக்கத்தை விஞ்சியதாக ரூபா 1,635,300 ஆன பொறுப்புக்களுக்காக உடன்பட்டமை காணப்பட்டது. | பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | பொது நிர்வாகப் பிரிவிற்கான 08 செலவு விடயங்களின் கீழ் தேறிய ஒதுக்கம் விஞ்சப்பட்டு பொறுப்புக்களுக்கு உடன்பட்டிருந்த தொகை ரூபா 1,338,749 மாத்திரமே. தேசிய உற்பத்தித்திறன் செயலக அலுவலகத்திற்கு உரித்தான 04 செலவு விடயங்களின் கீழ் தேறிய ஒதுக்கம் விஞ்சப்பட்டு பொறுப்புக்களுக்கு உடன்பட்டிருந்த தொகை ரூபா 322,710 ஆகும். 2019 ஆம் ஆண்டிற்கு உரித்தான 2020 வருடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட உறுதிச்சீட்டுக்களுக்காக 2019 ஆம் ஆண்டில் நிலுவையான ஒதுக்கத்தின் அளவுகளை கருத்திற் கொள்ளாது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தமையுடன் எதிர்காலத்தில் இவ்வாறான கொடுப்பனவுகள் தவிர்க்கப்படுவதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஈ) | 2020 ஆம் வருடத்தின் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தொடர்பான மாதிரிக் கணக்காய்வுச் சோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டிற்கான ரூபா 52,794,951 ஆன 12 பொறுப்புக்கள் சம்பந்தமான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்க வில்லை. | அனைத்துப் பொறுப்புக்களும் சரியாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டியமை. | 2019 ஆம் ஆண்டிற்கான சில கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டமை பொறுப்புக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டு முடிந்த பின்னரே ஆகும். அக் கொடுப்பனவுகள் தவிர்க்கப்பட முடியாதென்பதால் கொடுப்பனவுகள் |

| | | |
|---|---|---|
| | | மேற்கொள்ளப்பட்டதுடன் எதிர்காலங்களில் குறிப்பிட்ட பிரிவுகள் அறிவுறுத்தப்பட்டு அக்காலதாமதத் தவறை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.4 முற்பணக் கணக்கு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் சேவையை விட்டுச் சென்ற, ஓய்வூதியம் பெற்றுச் சென்ற மற்றும் இரண்டாம் நிலை அடிப்படையில் விடுவிக்கப்பட்டள்ள உத்தியோகத்தர்களின் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,293,671 ஆன கடன் மிகுதிகள் 1 வருடம் தொடக்கம் 04 வருடங்களான காலப்பகுதியில் நிலுவைகளாகக் காணப்பட்டன. | அறவிடப்பட வேண்டிய கடன் மிகுதிகளானது குறிப்பிட்ட காலத்திற்குள் அறவிடப்பட வேண்டியமை. | உத்தியோகத்தர்கள் 4 பேர் தொடர்பாக சட்ட அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கு நீதிபதித் திணைக்களத்தில் கோவைகள் திறக்கப்பட்டுள்ளன. 4 உத்தியோகத்தர்கள் மிகுதிகளைத் தீர்க்குமாறு கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இரு உத்தியோகத்தர்களின் கடன் மிகுதி மாதாந்தம் அறவிடப்பட்டு வருவதுடன் மரணித்த உத்தியோகத்தரின் கடன் மிகுதி ஓய்வூதியப் பணிக்கொடையில் அறவிடுவதற்காகவும் ஒரு உத்தியோகத்தரின் கடன் மிகுதி பிணையாளியிடமிருந்து அறவிடப்படுவதற்குமான நடவடிக்கை எடுக்கப்படும். இரண்டாம் நிலை அடிப்படையில் விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் மிகிகள், மாதாந்தம் தவணைப் பணமாக அறவிடப்படுவதுடன் 4 வருடங்களுக்கு |

| | | |
|---|---|---|
| | | மேற்பட்ட ரூபா 392,775 கடன் மிகுதியை அறவிடுவதற்குமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

**2.5 கூடுதல் கட்டணம் ஏற்படல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அகில இலங்கைச் சேவையிலான 30 உத்தியோகத்தர்களுக்காக 2019 ஆம் ஆண்டில் பெப்ரவரி 20 இலிருந்து 25 வரையில் வெளிநாட்டுப் பயிற்சி கற்கை நெறியொன்றுக்குப் பங்குபற்றுவதற்காக வழங்கப்பட்ட கற்கை நெறிக் கட்டணத்திற்குள் இராப் போசனச் செலவு உள்ளடக்கப்பட்டிருப்பதாக காட்டப்பட்டிருந்தது. 2015 மே 15 ஆந் திகதிய MF/01/2015/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4(ஆ)(1) பிரிவிற்கு இணங்காது இராப்போசன செலவிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 2,033,450 ஆனது மீண்டும் அறவிடப்பட வேண்டிய போதிலும், ரூபா 326,250 மட்டுமே அறவிடப்பட்டு இருந்தது. | நிதி அமைச்சின் சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேலதிகமாக வழங்கப்பட்ட தொகை குறிப்பிட்ட உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 எதிர்பார்த்த விளைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மாவட்டங்கள் 5 இற்கான நில பியச கட்டிட நிர்மாணமானது 2017 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டில் முடிவுறுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்நடவடிக்கை 2020 ஆகஸ்ட் வரையில் பூரணப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | திட்டமிட்டவாறு நிர்மாணத்தை முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டிற்குள் இலங்கை கணக்காளர் சேவையின் III ஆம் தரத்திலான 360 உத்தியோகத்தர்களுக்காக திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஒன்று திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக 67 உத்தியோகத்தர்கள் மட்டுமே பங்குபற்றி இருந்தனர். இது நூற்றுக்கு 19 இற்கும் குறைந்தளவு சதவீதம் ஆகும். | திட்டமிட்டவாறு உச்ச செயலாற்று கையுடன் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (இ) ஒன்றிணைந்த சேவைகள் பிரிவினால் வருடத்திற்குள் ஆட்சேர்ப்பதற்கான 6 பரீட்சைகள் மற்றும் 30 வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகள் நடாத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அப்பரீட்சைகள் நடாத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | கருத்துரை வழங்கப்படவில்லை. |

**3.2 பெறுகைகள்**

--------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2006 இன் தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் எதிர்வரும் 3 வருட காலங்களுக்காக பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |
| (ஆ) 2019 யூன் மாதத்தில் ரஷ்யாவில் நடைபெற்ற கண்காட்சி ஒன்றுக்காக அமைச்சர் பங்குபற்றிய போது பெறப்பட்ட விமான டிக்கட்டிற்காக ரூபா 324,975 இற்கு மேற்பட்ட விலை கொடுக்கப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.14 ஆம் வழிகாட்டிக்கு முரணாக இக் கொடுப்பனவுக்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | அமைச்சரின் வெளிநாட்டுப் பயணத்திற்காக விமான சேவையொன்றைத் தெரிவு செய்யும் போது அதன் பாதுகாப்புத் தன்மை, வினைத்திறன் மிக்க சேவை மற்றும் பொருத்தமான வகுப்பு போன்றன கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். மேலும், உலக விமானப் பயண சேவைகள் சீரமைப்பின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | | | Qatar Airways முதலாவது இடத்தில் காணப்படுவதுடன், Gulf Air காணப்படுவது அதற்குக் கீழான இடத்திலேயே ஆகும். அதன் பிரகாரம் Qatar Airways தெரிவு செய்யப்பட்டது. |

**3.3 நட்டங்களும் இழப்புக்களும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆரம்ப பரிசோதனைச் சந்தர்ப்பத்தில் விபத்தின் இழப்புக்கள் இனங்காணப்பட்டு நட்டங்கள் இழப்புக்களுக்கான பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு குறிப்பிடப்படாமையினால் இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக அவை அறவிடப்படல், நீக்கப்படல் வேண்டுமா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. | நிதிப்பிரமாணம் 104(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | பழுதுபார்ப்பதற்காகப் பயன்படுத்தப்படும் உதிரிப்பாகங்களுக்குக் காப்புறுதி நிறுவனத்தினால் காலத்துக்குக்காலம் அனுமதி வழங்கப்படுவதால் விபத்து தொடர்பாகத் தயாரிக்கப்படுகின்ற ஆரம்ப அறிக்கையில் நட்டத்திற்கான பெறுமதியைத் திட்டவட்டமாகக் குறிப்பிடுவதற்கான இயலாமை காணப்பட்டது. |
| (ஆ) | அவசர விபத்துக்கள் தொடர்பாக, அதில் பயணிக்கும் உத்தியோகத்தரோ அல்லது சாரதியினால் அண்மையில் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்தில் புகார் அளிப்பதற்கு உறுதி செய்ய வேண்டும். எனினும் ரூபா 2,700,000 இழப்பிற்கான விபத்தொன்று சம்பந்தமாக பொலிஸில் புகாரளிக்கப்படாமையுடன் 5 விபத்துக்கள் தொடர்பாக சாரதி பொலிஸ் நிலையத்தில் புகார் | நிதிப்பிரமாணம் 1642 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விபத்துக்கள் ஏற்படும் போது நடந்து கொள்ள வேண்டிய முறைகள் பற்றிக் குறிப்பிடப்பட்ட கடிதம் ஒன்றும் சாரதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. |

அளித்த போது அது காப்புறுதி இழப்பீட்டைப் பெறுவதற்காக மேற்கொண்ட புகார் மட்டுமே என்று கூறப்பட்டிருந்தது.

## 3.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்காய்வாளர் சேவையின் தரம் I இற்கான 49 உத்தியோகத்தர்கள் விசேட தரத்தின் பிரதான நிதி அலுவலர் பதவிக்காக மீளாய்வாண்டின் முடிவுற்ற திகதியில் முழுநேர பதில் கடமை புரிவதற்காக நியமிக்கப்பட்டிருந்தனர். | விசேட தரத்திற்கு உயர்த்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படுவதற்குத் தேவையான செயற்பாடுகளை எடுக்க வேண்டியமை. | இலங்கை கணக்காளர் சேவையின் I ஆம் தரத்திற்கான உத்தியோகத்தர் விசேட தரத்திற்கு உயர்த்துவதற்கான நடவடிக்கை நீதிமன்றக் கட்டளை ஒன்று காரணமாக 2016.11.29 திகதியிலிருந்து கைவிடப்பட்டமையால் வெற்றிடம் காணப்படும் பிரதான நிதி அலுவலர் பதவிக்காக இலங்கை கணக்காளர் சேவையின் தரம் I இற்கான தகைமைகளைக் கொண்ட உத்தியோகத்தர் சிரேஷ்ட நிலையின் பிரகாரம் முழு நேரப் பதில் கடமை புரிவதற்காக அரச சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டனர். மேற்கூறப்பட்ட வழக்கு நடவடிக்கைகள் முடிவுற்றதன் பின்னர், விசேட தரத்திற்கு உயர்த்தப்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான செயன்முறைகள் எடுக்கப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பதில் கடமைக்காக நியமிக்கப்பட்ட இலங்கை கணக்காளர் சேவையின் I ஆம் தரத்தின் 06 உத்தியோகத்தர்களின் பதில் கடமைக்கான சம்பளக் கொடுப்பனவு மாதிரிப் பரிசோதனையின் பிரகாரம் 03 உத்தியோகத்தர்களுக்காக 02 சம்பள ஏற்றம் ஆரம்ப சம்பளத்துடன் கூட்டப்பட்டும் மற்றும் 03 பேருக்கு 02 சம்பள ஏற்றம் படிகளாகவும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. ஆயினும், 26 தனிப்பட்டோரின் கோவைகளில் சம்பள மாற்றங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | தாபனக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.5.2 உப பிரிவின் பிரகாரம் பதில் கடமைப் பதவிக்கான சம்பளக் கணிப்பீட்டிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | இலங்கை கணக்காய்வாளர் சேவையின் I ஆம் தரத்தின் உத்தியோகத்தரின் சம்பளக் கொடுப்பனவு நடவடிக்கைகள் உரிய அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்களின் விடயப் பரப்பிற்குட்பட்ட செயற்பாடு என்பதுடன் அந் நிலைமை திருத்துவதற்காக உரிய அமைச்சின் செயலாளர் மற்றும் நிறுவனத் தலைவர்கள் அறிவுறுத்தப்படுவதற்குத் தேவையான செயன்முறைகளை எதிர்காலங்களில் எடுப்பேன் என தயவுடன் தெரிவிக்கின்றேன். |
| (இ) | 2007 திசெம்பர் 31 ஆந் திகதிய 21/2007(1) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளத்துடனான வெளிநாட்டு விடுமுறை வழங்கப்படும் போது உத்தியோகத்தரின் உரிய சேவைக்கு உரித்தான நிர்வாகத் தலைவருக்கு அறிக்கையிடல் வேண்டும். எனினும், இலங்கை கணக்காய்வாளர் சேவையின் I ஆம் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக குறிப்பிட்ட நிர்வாக உத்தியோகத்தரான பொது நிர்வாக மற்றும் ற் முகாமைத்துவ அமைச்சின் செயலாளருக்கு அறிக்கையிடாது 2019 ஆகஸ்ட் இலிருந்து 2022 யூலை வரையான வெளிநாட்டு விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. மேலும், அரசின் உத்தியோகபூர்வ மனை வழங்கப்படும் போது கைச்சாத்திடப்படுகின்ற உடன்படிக்கைப் பத்திரத்தின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் 12 | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இலங்கை கணக்காளர்வாளர் சேவைக் குறிப்பின் பிரகாரம் விசேட தரத்திற்கு உயர்த்தும் போது குறிப்பிட்ட துறை தொடர்பாக பட்டப்பின் படிப்பை பூர்த்தி செய்திருக்க வேண்டியதுடன் மேலும் கலாநிதிப் பட்டப் படிப்பைத் தொடர்வதாயின் அதற்காக தாபனக் கோவையின் xii ஆம் அத்தியாயத்தின் 16 ஆவது பிரிவின் பிரகாரம் சம்பளமற்ற விடுமுறை வழங்கப்பட முடியுமெனினும் கலாநிதிப் படிப்பிற்காக வெளிநாடு செல்வதற்கு அனுமதி வழங்கப்படும் போது தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை அவதானிக்கப்பட்டது. இது சம்பந்தமாக நிதி அமைச்சின் செயலாளருக்கு அறிவிப்பதுடன் தேவையான செயன்முறைகளை எதிர்காலத்தில் எடுப்பேன் என தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். |

| | | |
|---|---|---|
| மாதங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு வெளிநாடு சென்றுள்ள உத்தியோகத்தர் அரசின் மனை ஒதுக்கப்பட்டு வழங்கப்படுவதற்கு உரித்தற்றவர் என்ற போதிலும் மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர் கணக்காய்வுத் திகதியாகிய 2020 யூலை மாதம் 30 திகதி வரையில் மனையை மீண்டும் கையளிக்கவில்லை. | | |

**4. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் அனுமதிக்கப்பட்ட பதவியணியினர் 1792, உள்ளபடியான பதவியணியினர் 1409 மற்றும் வெற்றிடமான பதவியணியினர் 383 உம் ஆகும். மீளாய்வாண்டில் அமைச்சின் தனிப்பட்ட செலவு வகை சார்பாக ரூபா 1,079.7 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு தனிப்பட்டவரின் செலவு ரூபா 766,306 ஆக காணப்பட்டது. | அமைச்சின் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

**அனர்த்த முகாமைத்துவப் பிரிவு**

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 கணக்காய்விற்கான சாட்சிகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இழப்புக்கள் மற்றும் கைவிடுதல்கள் சம்பந்தமான கூற்றில் நிகழ்ச்சித் திட்டம் இலக்கம் 02 இன் கீழ் வருடத்திற்குள் நட்டங்கள் அறவிடல் / நீக்குதல் / கைவிடுதல்கள் தொடர்பாக கூற்றில் காட்டப்பட்டிருந்த ரூபா 50,062 ஆன பெறுமதி இழப்பீடுகள் நட்டங்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படவில்லை. | இழப்பீடுகள் நட்டங்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டியமை. | கருத்துரை வழங்கப்படவில்லை. |

#### 1.6.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

| அவதானிப்பு | | | | |
|---|---|---|---|---|
| சட்டதிட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நி.பி.1645 | தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் மத்திய நிலையத்தின் 6 வாகனங்களுக்கான லொக் புத்தகங்கள் பூரணப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 1645 இன் பிரகாரம் வாகன லொக் புத்தகங்கள் பூரணப்படுத்தப்பட வேண்டியமை. | குறிப்பிட்ட வாகனங்கள் தொடர்பான லொக் புத்தகங்கள் பூரணப் படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நி.பி.1647(ஆ)(உ) | தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் மத்திய நிலையத்தின் வாகனங்கள் மற்றும் அவற்றின் உபகரணங்கள் தொடர்பான முழுமையான சோதனைகள் நடாத்தப்பட்டு விபரங்கள் உள்ளடங்கிய பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 1647 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வாகனப் பட்டியலொன்று தயாரிக்கப்பட வேண்டியமை. | நிதிப்பிரமாணம் 1647 (ஆ) மற்றும் 1647 (உ) பிரகாரம் வாகனங்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டதாக பட்டியலொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | பொது 268(அ) மாதிரிப்படிவம் | தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் மத்திய நிலையத்தின் வாகனங்கள் தொடர்பாக பொதுப் படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்படுகின்ற மாதாந்தப் பொழிப்புக்களின் மூலப் பிரதிகள் அடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொழிப்புக்களின் மூலப் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. | 268(அ) பொதுப் படிவத்தின் பிரகாரம் வருடத்திற்கான பயணங்கள் தொடர்பான மாதாந்தப் பொழிப்புக்களின் மூலப் பிரதிகள் நிறுவனத் தலைவரினூடாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மதிப்பீட்டின் போதான பலவீனங்கள் அல்லது செயற்பாடுகள் எவ்விதத்திலும் திட்டமிடப்படாமை காரணமாக 4 மூலதனச் செலவு விடயங்கள் சம்பந்தமாக ஆரம்ப மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 200 மில்லியனுக்கு மேலதிகமாக மற்றும் குறைநிரப்பு மூலம் 2,782 மில்லியன் ஆன ஒதுக்கங்கள் ஏற்படுத்தப்பட்டு நூற்றுக்கு 81 தொடக்கம் | மதிப்பீடுகள் சரியாகத் தயாரிக்கப்பட்டு ஒதுக்கங்கள் பயன்படுத்தப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | போதியளவான கட்டுநிதி இல்லாமை, மதிப்பீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட செலவுகள் ஏற்படாமை. |

| | | | |
|---|---|---|---|
| | நூற்றுக்கு 100 வீதத்திற் கிடையிலான வீச்சில் சேமிப்பு காணப்பட்டது. மேலும், மீண்டெழும் செலவினங் களுக்காக ஆரம்ப மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டிருந்த ரூபா 200 மில்லியனுக்கு மேலதிகமாக குறைநிரப்பு மூலம் ரூபா 439 மில்லியன் ஒதுக்கங்கள் ஏற்படுத்தப்பட்டு நூற்றுக்கு 99 வீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மூலதனச் செலவு விடயங்கள் 7 இற்கான மொத்த மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா 2,141,700,000 சம்பந்தமாக மொத்தச் செலவுகள் ரூபா 1,066,266,557 என்பதால் ரூபா 1,075,433,443 சேமிப்பாகும். அது நூற்றுக்கு 33 தொடக்கம் நூற்றுக்கு 100 வீதத்திற்கிடையிலான வீச்சைக் கொண்டிருந்தது. | - மேற்படி - | பெறுகைச் செயற்பாடுகளில் ஏற்பட்ட பிரச்சினைகளின் அடிப்படையில் சில பெறுகைகள் செயற்படுத்தப்பட்டிராமை. |
| (இ) | மீண்டெழும் செலவு விடயங்கள் 05 இற்கான மொத்த மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா 10,620,000 சம்பந்தமாக மொத்தச் செலவுகள் ரூபா 913,649 ஆகும். இதன் பிரகாரம் சேமிப்புக்கள் ரூபா 9,706,351 என்பதால் அது நூற்றுக்கு 35 தொடக்கம் நூற்றுக்கு 100 வீதத்திற்கிடையிலான வீச்சைக் கொண்டிருந்தது. | - மேற்படி - | கட்டுநிதி இல்லாமை மற்றும் எதிர்பார்க்கப்பட்ட செலவுகள் ஏற்படாமை, உறுப்பினர்களின் கட்டணங்கள் செலுத்தப்படாமை, எதிர்பார்க்கப்பட்ட அலுவலர்கள் ஆட்சேர்க்கப்பட முடியாமை போன்ற காரணங்களினால் ஏற்பட்ட அமையச் சேமிப்புக்களாகும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 216(அ) பிரிவிற்கு முரணாக 5 செலவு விடயங்களின் சேமிப்பை விஞ்சியதாக ரூபா 2,195,549 ஆன பொறுப்புக்களுக்கான கடப்பாடு காணப்பட்டது. | செலவு விடயங்களின் சேமிப்பை விஞ்சியதாக பொறுப்புக்களுக்கு உடன்படாமை. | 2019 திசெம்பர் மாதப் பட்டியல்கள் 2020 இன் ஆரம்ப சில மாதங்களுக்குள் கொடுப்பனவிற்காக |

| | | |
|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்பட்ட காரணத்தினால் இச்செலவுகள் ஏற்பட்டன. |
| (ஆ) 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்களின் பிரகாரம் 17 மீண்டெழும் செலவு விடயங்களுக்கான பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 265,731,227 என்பதுடன், 2019 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த அவற்றின் பெறுமதி ரூபா 271,990,789 என்பதால் திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்கள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் ரூபா 6,259,562 ஆல் இணங்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் பெறுமதியை சரியாக காட்ட வேண்டியமை. | வேறுபாடானது சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பத் தவறு என்பதுடன் அது 2020 யூன் மாதம் அரச கணக்குகள் திணைக்களத்தினால் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்களின் பிரகாரம் 09 மூலதன விடயங்களுக்கான பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 713,892,017 என்பதுடன் 2019 நிதக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறுமதி ரூபா 406,406,820 என்பதால் திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்கள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் ரூபா 307,485,197 ஆல் இணங்கவில்லை. | பொறுப்புக்களின் பெறுமதியை சரியாகக் காட்டப்பட வேண்டியமை. | வேறுபாடானது சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பத் தவறு என்பதுடன் அது 2020 யூன் மாதம் அரசு கணக்குகள் திணைக்களத்தினால் தீர்க்கப்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.3 முற்பணக் கணக்கு மீதி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடங்கள் 2 இற்கு முன்னர் ஓய்வூதியப் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 117,552 ஆன கடன் மிகுதி மீளாய்வாண்டின் இறுதியின் போது தீர்க்கப்படாது இருந்தது. | கடன் மிகுதி விரைவில் தீர்க்கப்பட வேண்டியமை. | ஹோமாகம மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று விசாரிக்கப்பட்டு வருவதுடன் இவ்வுத்தியோகத்தர் 60 வயது பூரணமடைந்த நிலையில் ஓய்வூதியம் பெற்றுச் சென்றதுடன் 2019.05.11 ஆந் திகதி மரணித்தமையால் செலுத்தப்படாத ஓய்வூதியச் சம்பளம் மற்றும் பணிக்கொடையில் அவருடைய பணத்திற்கு உரித்துரையவரிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நோக்கங்கள் நிறைவேற்றப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாத்தளை மாவட்டத்தில் ஆபத்தான வலயங்களில் வசிக்கும் 800 குடும்பங்களில் 740 இற்காகவும் கலேவெல மற்றும் அம்பன்கஹ கோரளைப் பிரதேசங்களில் ஆபத்தான வலயங்களில் வசிக்கும் எவ்வித குடும்பங்களுக்கும் நன்மைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. ஏனைய பிரதேச செயலகத்திற்குரிய 06 பிரதேசங்களுக்கு நன்மைகள் வழங்கியமைக்கான பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கு 6 தொடக்கம் நூற்றுக்கு 13 வீதம் வரையில் மிகவும் குறைந்தளவு மட்டத்தில் காணப்பட்டது. 2019 ஆம் ஆண்டிற்கான மாத்தளை மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 59,791,800 ஆன ஏற்பாட்டுத் தொகையில் ரூபா 22,216,800 மட்டுமே பயன்படுத்தப்பட்டமையால் ஒட்டு மொத்தமாக மாவட்டத்தின் ஏற்பாடுகளில் பயன்பாடு நூற்றுக்கு 37 வீதம் ஆகும். | ஆபத்தான வலயங்களில் வசிக்கும் குடும்பங்களுக்காக நன்மைகள் விரைவில் வழங்கப்பட வேண்டியமை. | கணக்காய்வு விசாரணை சம்பந்தமாக பிரதேச செயலகங்களின் கருத்துரைகளைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. |

**3.2 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் பெறுகைத் திட்டத்தில் 5KW ஜெனரேட்டருக்கான மதிப்பீடு ரூபா 6.500,000 என்பதுடன் 3 KW ஜெனரேட்டர்கள் 250 ஆனது ரூபா 18,176,038 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் | திட்டத்திற்கு இணங்க மதிப்பீடுகள் முறையாகத் தயாரிக்கப்பட வேண்டியமை. | மதிப்பீடு தயாரிக்கும் போது தொலைபேசி மூலம் விலை விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதால் சந்தைப் பெறுமதி பிழையாக கருதப்பட்டமையால் இப்பலவீனம் எழுந்துள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட செலவை விட ரூபா 11,676,038 அதாவது நூற்றுக்கு 179.63 வீதம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | எதிர்காலத்தில் இது தொடர்பாக கவனம் செலுத்தப்படும். |
| (ஆ) | தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் 1000 லீட்டர் நீர்த்தாங்கிகள் 1000 இனை கொள்வனவு செய்து பங்கீடு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், குறிப்பிட்ட காலத்திற்குள் பெறுகைகள் நடைபெறாத காரணத்தினால் மாவட்டச் செயலகங்களினால் பெறுகை நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு கொள்வனவுகள் செய்யப்பட்டமையால் அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் விலையினை விட ரூபா 560,232 அதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தேசிய பெறுகை நடைமுறைகளை முறையாகப் பின்பற்ற வேண்டியமை. | இவ்வருடத்தில் 24 மாவட்டங்களில் தாக்கமளித்திருந்த கடுமையான வறண்ட வானிலையின் காரணத்தினால் களுத்துறை, கேகாலை, மாத்தளை, யாழ்ப்பாணம், போன்ற மாவட்டச் செயலாளர்களினால் நீர்த்தாங்கி வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அதுவரையில் நீர்த்தாங்கிகளை கொள்வனவு செய்வதற்கான பெறுகை நடைமுறைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தமையால் மாவட்டச் செயலாளர்களின் விரைவான தேவையைக் கருத்திற் கொண்டு மாவட்டச் செயலகங்களின் பெறுகைத் தீர்மானங்களின் விலைகளின் அடிப்படையில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டன. |

### 3.3 சொத்து முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சீன அரசின் நன்கொடை மூலம் குருநாகல் மாவட்டத்திற்காக வழங்கப்பட்ட 09 நீர் பவுசர்கள் அவற்றின் அளவு காரணமாக தெருக்கள் வழியாக ஓட்டுவதற்கு இயலாமை, செயற்பாடுகள் மற்றும் | லொறி பவுசர் உபயோகித்தல் மற்றும் பேணுதல் சம்பந்தமாக சாரதிகளுக்குப் பயிற்சிகள் | டிராக்டர் பவுசர் உபயோகிக்கப்படும் போது அதன் திறன் குறைவாக இருப்பதால் அதிக தடவைகள் ஓட்டுவதற்கு அதிகமான |

| | | |
|---|---|---|
| பராமரிப்பில் உள்ள சிக்கல்கள் போன்ற காரணங்களால் விளைவற்றதாகக் காணப்பட்டன. | வழங்கல் மற்றும் அந்த லொறி பவுசர்களை உபயோகிக்கக் கூடிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியமை. | செலவுகள் ஏற்படுகின்றன. இந்த டிராக்டர் பவுசர் மாவட்டச் செயலளாரினால் பரிந்துரைக்கப்பட்டு அனுப்பப்பட்ட இரு ஓட்டுநர்களுக்காக பவுசர்களைக் கையாளுதல் சம்பந்தமாக கொழும்பில் பயிற்சிகள் வழங்கப்பட்டமையுடன் அவ் ஓட்டுநர்கள் மூலம் மாவட்டத்தின் ஏனைய ஓட்டுநர்களுக்கான பயிற்சிகள் அளிக்கப்படுவதற்கு மாவட்டச் செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

## 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வெள்ளம் மற்றும் மண்சரிவுகளின் அதிகளவான ஆபத்து காரணமாக தத்தமது வசிப்பிடங்களை விட்டு வெளியேற்றப்பட்ட நபர்களை மீள் குடியேற்றுவது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) மீள்குடியேற்றல் வழிகாட்டியின் படிநிலை இலக்கம் 02 இன் பிரகாரம் குழு ஒன்றினால் பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிராமையுடன் யட்டவத்தப் பிரதேச செயலகத்தில் மீள் குடியேற்றல் நிகழ்ச்சித் திட்டத்திற்காகப் பதிவு செய்யப்பட்டிருந்த 13 பயனாளிகள் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பினால் வெளியிடப்பட்ட புவித் | மீள்குடியேற்றல் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | பிரதேசச் செயலகத்தினால் கருத்துரை வழங்கப்பட்டதன் பின்னர் கருத்துரைகள் வெளியிடப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | தொழில்நுட்ப அறிக்கைகளின் பிரகாரம் ஆபத்து வலயங்களில் அவர்கள் இருப்பதாக உறுதிப்படுத்தப்படவில்லை. | | |
| (ஆ) | அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 06 பிரதேச செயலகப் பிரிவுகளுக்காக 2017 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை 91 பயனாளிகளின் மீள் குடியேற்றத்திற்காக ரூபா 127.450,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இச் செயற்பாட்டிற்காக 03 வருடங்கள் எடுக்கப்பட்டிருந்ததுடன் 2020 சனவரி வரையில் அவ்வீடுகளில் வசிக்காமையால் மக்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்காகப் பாதுகாப்பான இடங்களில் மீள்குடியேற்றல் நடவடிக்கையை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு முடியாது என்பது அவதானிக்கப்பட்டது. | மக்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்காகப் பாதுகாப்பான இடங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் வெற்றிகரமாக செய்யப்பட வேண்டியமை. | மாவட்டச் செயலகத்தினால் கருத்துரை வழங்கப்பட்ட பின்னர் கருத்துரைகள் வெளியிடப்படும். |
| (இ) | தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் மத்திய நிலையத்தினால் மாத்தளை மாவட்டத்தின் பிரதேச செயலாளர் பிரிவுகளில் கடுமையான வறண்ட காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிப்பதற்காக வழங்கப்பட்ட 16 நீர்த் தாங்கிகள் நோக்கத்திற்கு முரணான செயற்பாடுகளுக்காகப் பாவனை செய்யப்பட்டன. மேலும் 38 நீர்த்தாங்கிகள் சேதமடைந்தமை, நீர்த்தாங்கிகள் தொடர்பான தகவல்கள் இல்லாமை என்பன அவதானிக்கப்பட்டன. | பயனாளிகளின் முன்னுரிமைகள் ஆவணப் படுத்தப்படல் திருத்தப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை | மாவட்டச் செயலகத்தினால் கருத்துரை வழங்கப்பட்ட பின்னர் கருத்துரைகள் வெளியிடப்படும்.- |

## 4. நல்லாட்சி

### 4.1 பொது மக்களுக்குச் சேவைகளை வழங்குதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அவசர அனர்த்த நிலைமைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குதல் தொடர்பாக திறக்கப்பட்ட வங்கிக் கணக்கில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நன்கொடைகள் மூலம் கிடைக்கப் பெற்ற நிவாரணங்களில் 2019 திசெம்பர் 31 திகதி வரையில் ரூபா 294.73 மில்லியன் ஆன நிதியம் நிறுவப்பட்டிருந்தது. சீன அரசின் 1.00 மில்லியன் டொலர் நன்கொடையானது இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த நிதியியை அனர்த்த நிவாரண நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்குப் போதுமானளவு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நன்கொடைகளின் மூலம் பெறப்படும் நிவாரணங்கள் அவர்கள் நன்கொடை அளித்த இலக்குகளை அடைவதற்குப் பயன்படுத்தப்பட வேண்டியமை. | 2017 ஆம் ஆண்டில் வெள்ள இடர் நிலைமைகளால் முழுதாக வீடுகளை இழந்த குடும்பங்களுக்காக வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் செயற்படுத்தப்படுகின்ற உத்தேச திட்டத்திற்காக இந்த அனர்த்த நிவாரணக் கணக்கில் காணப்படுகின்ற தொகையைப் பயன்படுத்துவதற்கு அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவதற்காக அனர்த்த முகாமைத்துவ விடயப்பரப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் Yapka Construction (Pvt) Ltd. எனும் சீன நிர்மாணக் கம்பனியுடன் உடன்படிக்கையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் அனுமதிக்கப்பட்ட பதவியணியினர் 114 என்பதுடன் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பதவியணியினர் 81 ஆகும். இதன் பிரகாரம் சிரேஷ்ட பதவிகளுடன் 33 வெற்றிடங்கள் காணப்பட்டன. | தேவையான பதவியணியினரின் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட வேண்டும். | அனர்த்த முகாமைத்துவப் பிரிவில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புமாறு பொது நிர்வாக அமைச்சிற்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. 2020.06.17 ஆந் திகதி வரையில் அனர்த்த முகாமைத்துவப் பிரிவில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 31 ஆகும். |